மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதிர்ஷ்டத்தைப் பரிசோதிக்க அரசாங்கம் பணத்தைச் செலவு செய்ய முடியாது. ஆனால் கிணறு வெட்ட மானியம் இன்றையத்தினம் இந்தந்த மாவட்டத்திற்கு இன்னின்ன தொகை என்று பிரித்து வைத்திருக்கிறார்கள். கூடுதலாகத் தொகை ஒதுக்க வேண்டுமென்ற கருத்தை அங்கத்தினர் அவர்கள் தெரிவிப்பாரானால் அதுபற்றி பரிசீலிக்கலாம். இன்றுள்ள நிலையில், இப்பொழுது அரசாங்கம் குறிப்பிட்ட அளவு, இரண்டு பகுதிகளாகப் பணத்தைப் பிரித்துத் தருகிறார்கள். வேலை நடக்கும்பொழுது வேலையின் அளவை எடுத்துக் கொண்டு தொடர்ந்து வேலை நடத்த இதைத் தருகிறோம். அதிருஷ்டம் இல்லை, ஆகவே தள்ளிவிடுங்கள் என்று சொன்னால் அப்பொழுது நஷ்டக் கணக்கு அதிகமாகப் போய்விடும்.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஜில்லாவாரியாக எவ்வளவு லட்ச ரூபாய் கிணறுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 1966–67-ஆம் ஆண்டுக்குரியது என்று நினைக்கிறேன். தோண்டப்பட்ட கிணறுகளுக்காக இரண்டாவது தவணைப் பணத்தைக் கொடுப்பதற்குள் ஏற்கனவே கொடுத்த பாதிப் பணம் செலவழிக்கப்பட்டுவிடும். அதனால் வெட்டப்பட்ட கிணற்றைப் பூராவும் கட்ட முடியாது. ஆகவே, அதிக அளவில் தொகையை ஒதுக்கி அதிகமான கிணறுகளைக் கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1967–68-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகைதான் நான் குறிப்பிட்டது. கனம் உறுப்பினர் 1966–67ம் ஆண்டுக்கான தகவல்பற்றிக் கேட்கிறார்கள். கனம் உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் தகவல் இல்லாத காரணத்தால் அதை நான் தரவில்லை. இப்பொழுதும் அதே பதிலைத் தான் தரவேண்டும். 1967–68-ம் ஆண்டுக்காக 300 லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 357, 358, 359, 360 17—7—1967 (திங்கட்கிழமை) வரை தள்ளிவைக்கப்படுகின்றன.

செயற்கை மழை

* 361 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செயற்கை மழை வரவழைக்கும் ஆராய்ச்சிக்காக வருடா வருடம் எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகிறது ?

(இ) அதனால் இதுவரை ஏதாவது பலன் ஏற்பட்டுள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) —

	ரூபாய்.
1958–59 } 1959–60 }	4,870·00
1960–61	5,760·00
1961–62	15,430·00
1962–63	12,330·00
1963–64 } 1964–65 }	25,420·00
1965–66 } 1966–67 }	26,530·00

(இ) இச்சோதனைகள் ஆய்வு அடிப்படையில் நடத்தப்படுகின்றன. இதுவரையில் கிடைத்துள்ள முடிவுகளைக் கொண்டு, அவற்றின் வெற்றியை ஐயந்திரிபற உறுதிசெய்ய இயலவில்லை.

(உ) இக் கேள்வி எழவில்லை.

1967 ஜூலை 15]

திரு என். சங்கரய்யா : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து, கடந்த பல ஆண்டுகளாக சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் இதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. ஆனால், இதனுடைய பலன் என்ன என்பதை இன்னும் உறுதியாகக் கூறமுடியவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, உறுதியாக அதைப்பற்றித் தெரியும்வரை, இதில் வீணாக மேலும் தொகை செலவழிக்காமல் இந்தத் திட்டத்தையே நிறுத்திவைக்கவேண்டும். அல்லது, அதைப்பற்றி, தீவிரமாக முயற்சி செய்து, திட்டவட்டமான முடிவிற்கு அரசாங்கம் வரவேண்டும். இதில் எதைச் செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1967 பிப்ரவரி முடிய பரிசோதனை செய்யவேண்டும் என்று மத்திய சர்க்கார் சொன்னார்கள். அதன் பிரகாரம் பரிசோதனை நடந்திருக்கிறது. மீண்டும் இது வெற்றிகரமாக நடக்காத காரணத்தால் சர்க்கார் கைவிடலாம் என்று நினைத்தாலும், மத்திய சர்க்கார் " இன்னும் பரிசீலனை செய்யுங்கள் " என்று ஆலோசனை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. ர. நல்லசிவன் : வருடா வருடம் இதற்கான செலவு அதிகப்பட்டுக்கொண்டே வந்திருக்கிறது. அதை நாம் தெளிவாகப் பார்க்கிறோம். ஒரு பத்து வருஷ ஆராய்ச்சிக்குப் பிறகாவது இதில் ஏதாவது கொஞ்சமாவது பலன் கிடைக்கும் சூழ்நிலை தெரிகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரகாரம், இது வெற்றி பெறும் என்று நிச்சயமாக உறுதியிட்டுச் சொல்ல முடியாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. போஜன் : இந்த ஆராய்ச்சியை நம் மாநில சர்க்கார் கைவிட நினைத்தாலுங்கூட. மத்திய சர்க்கார், திரும்பவும் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும் என்று சொல்வதாக இருக்கிறது. அப்படியானால் இதற்காகும் செலவை மத்திய சர்க்கார் தருகிறதா ? அல்லது மாநில சர்க்காரே தான் செலவழிக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த செலவை மத்திய சர்க்கார் தான் ஏற்றுக்கொள்கிறது.

திரு. மு. சண்முகம் : இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் யார் யார் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதுபற்றித் தகவல் இல்லை, கனம் உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் சேகரித்துக் தரப்படும்.

திரு. ப. மகாதேவன் : சென்னையில் சில ஸ்டுடியோக்களில் செயற்கை மழை பெய்கிறதே, அதுபோல, வேறு எங்காவது இந்தப் பரிசோதனையைச் செய்து பார்த்ததுண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1958-ம் ஆண்டில் கோவையிலும், குந்தாவிலும், **1961-ம்** ஆண்டில் திருச்சியிலும் பரிசோதனை செய்து பார்த்திருக்கிறார்கள். இவற்றின் விளைவாக ஒரு பலனும் ஏற்படவில்லை என்ற தகவல் தான் கிடைத்திருக்கிறது. சினிமாவில் அவர்கள் காட்சியாக ஏதாவது செய்கிறார்களா அல்லது உண்மையிலேயே செயற்கை மழை பெய்ய வைத்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. சா. மெய்யப்பன் : இந்த ஆராய்ச்சி எந்தெந்தப் பகுதியில் நம் மாநிலத்தில் நடைபெற்றிருக்கிறது என்று சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதற்கு முன் உள்ள கேள்விக்கு அளித்த பதிலே தான் இதற்கும்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas experimenting with artificial rain and trying to get rain by this kind of method is mostly a fantastic scheme conceived by some scientists, will this Government advise the Central Government not to waste good money after this bad business?

THE HON. THIRU C. N. ANNADURAI: Most of the experiments of the scientists are always considered by laymen as fantastic but this is not a fantastic experiment. We have not yet reached a stage where we can be certain about it. But at some future date we will certainly be very certain about it.

மருத்துவ தேர்வுகள்.

* 362 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் முதல் புதிய விதியின் கீழ் மருத்துவக் கல்லூரியில் மூன்று முறை தேர்ச்சியடையாத மாணவர்கள் நான்காவது முறையும் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க அரசாங்கம் உத்தேசித் துள்ளதா?

(இ) ஹரிஜன மாணவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு கொடுக்க உத்தேசமுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியம்: கடைசி முறையாக இந்த விதியைத் தளர்த்தி, நான்காவது தடவை தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: விதிமுறைகள் பல்கலைக் கழகத்தால் இயற்றப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் தலையிடுவதற்கு விரும்பவில்லை.

நடமாடும் மருத்துவ மனைகள்

* 363 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடமாடும் மருத்துவ மனைகள் எங்கெங்கு உள்ளன?

(இ) இல்லையெனில் அவற்றை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) நடமாடும் மருத்துவ மனைகள், ஆலங்காயம், கூடலூர், உதகமண்டலம், செய்யூர், ஹரூர், ஜயங் கொண்ட சோழபுரம், சங்கரன்கோயில் ராமநாதபுரம், கொடைக்கானல், திண்டுக்கல், ஈரோடு ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். சங்கரய்யா: இந்த நடமாடும் மருத்துவ மனைகளை அரசாங் கம் ஏற்படுத்தும்போது, எந்த அடிப்படையில் அந்தப் பிரதேசங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன?